போலீஸாருக்கு இலவச பயணம்: ஆயத்தப் பணிகள் தொடங்கின

சென்னை, நவ.15: போலீஸாருக்கு இலவச பயண அட்டை வழங்குவது தொடர்பான ஆயத்தப் பணிகள் தொடங்கியுள்ளன.

தமிழக காவல்துறையில் இரண்டாம் நிலை காவலர் முதல் ஆய்வாளர்கள் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்கலாம். அதற்கு காவலர் அடையாள அட்டை வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அண்மையில் அறிவித்தார்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் முதல் கட்டமாக பேருந்துகளில் பயணிக்கும் காவலர்கள் குறித்த விவரம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உள்துறை துணைச் செயலாளர் காவல்துறை சட்ட ஒழுங்கு டிஜிபிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

குறிப்பாக சென்னையைப் பொருத்தவரையில் ஏசி பேருந்துகள் தவிர இலவசமாக மாதம் முழுவதும் அனைத்து மாநகர பேருந்துகளில் பயணம் செய்வதற்கும், மற்ற மாவட்டங்களில் பெண்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், அவர்களின் உதவியாளர் ஆகியோருக்கு வழங்கப்படுவது போல கட்டணமில்லா பயணச்சீட்டு திட்டத்தில் காவலர்கள் சேர்க்கப்படுவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பயனாளிகளுக்கு ஸ்மார்ட் அட்டை விரைவில் வழங்கப்பட இருப்பதாக போக்குவரத்துத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வரைவு வாக்காளர் பட்டியல்: மாவட்டத் தேர்தல் அலுவலர் ஆலோசனை

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வரைவு வாக்குச்சாவடி பட்டியல்கள் குறித்து சென்னை ரிப்பன் மாளிகையில் திங்கள்கிழமை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்திய மாவட்ட தேர்தல் அலுவலரும் மாநகராட்சி ஆணையருமான ககன்தீப் சிங் பேடி.

சென்னை, நவ. 15: சென்னையில் அண்மையில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் மாவட்டத் தேர்தல் அலுவலர் ககன்தீப் சிங் பேடி திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படுவதையொட்டி, அனைத்து மாவட்டங்களிலும் வரைவு வாக்காளர் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. சென்னை மாவட்டத்தின் 16 சட்டப் பேரவைத் தொகுதிகளில் 19 லட்சத்து 92 ஆயிரத்து 198 ஆண் வாக்காளர்களும், 20 லட்சத்து 60 ஆயிரத்து 767 பெண் வாக்காளர்களும், 1,073 திருநங்கைகள் என மொத்தம் 40 லட்சத்து 54 ஆயிரத்து 38 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். வரைவு வாக்காளர் பட்டியல் 4, 5, 6, 8, 9, 10, 13 மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட திருத்தத்துக்கு ஆதார் நகலை இணைத்து சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் நவம்பர் 30 வரை விண்ணப்பிக்கலாம். மேலும், நவம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் திருத்தத்துக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. www.nvsp.in என்ற இணையதளம் மூலமாகவும் திருத்தத்துக்கு விண்ணப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், சென்னையில் உள்ள 200 வார்டுகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் மாவட்டத் தேர்தல் அலுவலர் ககன்தீப்சிங் பேடி ரிப்பன் மாளிகையில் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார். இதில், வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள், அலுவலர்கள் நியமனம் உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

அரசுப் பள்ளியில் படித்து பொறியியல் படிப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ.74 கோடி ஒதுக்கீடு

சென்னை, நவ.15: பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வி படிப்புகளில் 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் கீழ் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்விக் கட்டண நிதி ரூ.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அரசாணை: அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத உள் ஒதுக்கீடு மூலம் தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும் என முதல்வர் அறிவித்தார்.

தமிழக அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கை சட்டத்தின் மூலம் 7.5 சதவீத இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

2021- 22 ஆம் கல்வியாண்டில் பொறியியல் மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்கள் 7.5 சதவீத முன்னுரிமை அடிப்படையில் 7, 876 பேர் சேர்ந்துள்ளனர். அந்த மாணவர்களுக்கான படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் வழங்கப்படும்.

அண்ணா பல்கலைக்கழகத் துறைகள், அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் நடத்தும் பாடப்பிரிவுகளுக்கான படிப்பு கட்டணங்கள் அந்தக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

அரசு உதவி பெறும் கல்லூரிகள் நடத்தும் சுயநிதி பாடப் பிரிவுகளுக்கும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் நடக்கும் பாடப்பிரிவுகளுக்கான படிப்புக் கட்டணங்கள் கல்வி கட்டண நிர்ணயம் செய்தபடி கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

2021-22-ஆம் கல்வியாண்டில் தரச்சான்று பெறாத படிப்புகளுக்கு ரூ.50 ஆயிரமும், தரச்சான்று பெற்ற படிப்புகளுக்கு ரூ.55 ஆயிரமும், ஒருமுறை பெறப்படும் வளர்ச்சி நிர்வாக நிதியாக ரூ.5,000 வழங்கப்படும்.

மேலும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி கட்டணம் கல்வி கட்டணக் குழு நிர்ணயித்துள்ள தொகை வழங்கப்படும்.

அதிகபட்சமாக ரூ.40,000 விடுதிக் கட்டணமாக வழங்கப்படும். இதில் கல்லூரி வசூலிக்கும் விடுதி கட்டணம் குறைவாக இருந்தால் அந்தத் தொகையே வழங்கப்படும். போக்குவரத்துக் கட்டணமாக பேருந்துகளை பயன்படுத்தும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.25,000 அல்லது கல்லூரி வசூலிக்கும் பேருந்து கட்டணம் இதில் எது குறைவோ அந்த தொகையை வழங்கப்படும்.

கட்டணம் வசூலிக்கக் கூடாது: அரசுப் பள்ளியில் படித்து 7.5 சதவீத முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணவர்களிடம் எந்தவித கட்டணத்தையும் கல்வி நிறுவனங்கள் வசூலிக்கக் கூடாது. மாணவர்களிடம் திருப்பி வழங்கக்கூடிய வைப்புத்தொகை கட்டணம் நூலக கட்டணம் மற்றும் உணவு விடுதி காப்பு தொகை கட்டணம் போன்றவற்றையும் மாணவர்களிடம் வசூலிக்கக் கூடாது.

ஒவ்வொரு கல்லூரிகளிலும் 7.5 சதவீத முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரியில் சேர்க்கை பெறும் மாணவர்களின் குறை தீர்ப்பதற்கு குறை தீர்ப்பு பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.

2021-22ஆம் கல்வி ஆண்டில் அரசுப்பள்ளியில் படித்து 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டில் பொறியியல் படிப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு கட்டணம் செலுத்துவதற்காக ரூ.74 கோடியே 28 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்மா உணவகங்களில் 5 நாள்களில் 13 லட்சம் பேருக்கு இலவச உணவு

சென்னை, நவ. 15: சென்னையில் உள்ள அம்மா உணவகங்களில் கடந்த 5 நாள்களில் 13 லட்சம் பேருக்கு இலவச உணவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மழை பாதிப்பு குறைந்துள்ளதால் திங்கள்கிழமை (நவ.15) முதல் அம்மா உணவகங்களில் இலவச உணவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெய்த தொடர் மழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் தேங்கிய மழைநீரை அகற்றுதல், மரக்கிளைகளை அப்புறப்படுத்துதல், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக மீட்டு நிவாரண மையங்களில் தங்கவைத்தல் போன்ற நிவாரண பணிகள் நடைபெற்றன.

மழைநீர் தேங்கிய தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு மாநகராட்சியின் நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாநகரின் பெரும்பாலான இடங்களில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இயல்புநிலை திரும்பியுள்ளது.

முகாம்களில் இருந்த பொதுமக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்கு படிப்படியாக செல்லத் தொடங்கி உள்ளனர்.

திங்கள்கிழமை நிலவரப்படி நிவாரண முகாம்களில் 1,530 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் மற்றும் மழைநீர் தேங்கி பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நவம்பர் 7 முதல் திங்கள்கிழமை (நவ.15) வரை மாநகராட்சி சார்பில் 60 லட்சத்து 74 ஆயிரத்து 37 உணவு பொட்டலங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இலவச உணவு ரத்து: சென்னை மாநகராட்சிப் பகுதியில் இயங்கி வரும் 403 அம்மா உணவகங்களில் நவம்பர் 10-ஆம் தேதி முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (நவ.14) வரை 13 லட்சத்து 68 ஆயிரத்து 385 பேருக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மழை பாதிப்பு குறைந்துள்ளதால் திங்கள்கிழமை(நவ.15) முதல் அம்மா உணவகங்களில் இலவச உணவு ரத்து செய்யப்பட்டுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுப்பாடுகள் நீக்கம்

மின்சார ரயில்களில் அலை மோதிய கூட்டம்

சென்னை, நவ.15: புறநகர் மின்சார ரயில் சேவையில் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து கட்டுப்பாடுகளும் திங்கள்கிழமை நீக்கப்பட்டதையடுத்து, மின்சார ரயில்களில் கூட்டம் அலைமோதியது.

கரோனா நோய்த்தொற்று பரவலை தடுக்க பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. அப்போது, கூட்ட நெரிசல் மிகுந்த காலை மற்றும் மாலை நேரங்களில் குறிப்பிட்ட சில பிரிவுகளில் ஆண்கள் பயணம் செய்ய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அத்தியாவசியப்பணியாளர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. இதுபோல, பயணச்சீட்டு பெறுவதில் பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்தன.

இந்நிலையில், புறநகர் மின்சார ரயில்களில் பயணிக்க விதிக்கப்பட்டிருந்த அனைத்து கட்டுப்பாடுகளும் திங்கள்கிழமை நீக்கப்பட்டன. இதையடுத்து, அனைத்து புறநகர் மின்சார ரயில்களில் பயணிகள் முழுமையாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். சீசன் டிக்கெட், ரிட்டர்ன் டிக்கெட், முன்பதிவு இல்லாத டிக்கெட்டுகள் யூ.டி.எஸ். செயலி மூலம் டிக்கெட் எடுப்பதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் புறநகர் மின்சார ரயில்களில் திங்கள்கிழமை வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

சென்னை சென்ட்ரல் - திருவள்ளூர், அரக்கோணம், சென்ட்ரல் - கும்மிடிப்பூண்டி மற்றும் சூலூர்பேட்டை, சென்னை கடற்கரை - தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு, சென்னை கடற்கரை - வேளச்சேரி ஆகிய 4 மார்க்கங்களிலும் உள்ள ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பள்ளி-கல்லூரிகள் மாணவர்கள், அரசு, தனியார் அலுவலக ஊழியர்கள், வியாபாரிகள், பெண்கள் போன்றவர்களும் அதிகளவு பயணம் செய்தனர். தாம்பரம், செங்கல்பட்டு, எழும்பூர், நுங்கம்பாக்கம், மாம்பலம், கிண்டி, ஆவடி, அம்பத்தூர், திருநின்றவூர், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர், கொருக்குப்பேட்டை, திருத்தணி உள்ளிட்ட ரயில்நிலையங்களிலும் மக்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.

உதவி செவிலியர் பயிற்சி: நவ.23-க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, நவ. 15: தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சிக்கு நவம்பர் 23-க்குள் மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி வெளியிட்ட செய்திக் குறிப்பில், சென்னை மாநகராட்சியின் பொதுசுகாதாரத் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் 2021-2022-ஆம் ஆண்டு மருத்துவ இணையியல் படிப்பான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி தொடங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும், மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.

உதவி செவிலியர் பயிற்சிக்கு பிளஸ்2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர், தொற்று நோய் மருத்துவமனை எண்.187, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை-81 என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை நவம்பர் 17-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 4 அணுகி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நவம்பர் 23-ஆம் தேதி மாலை 4 மணிக்குள் மேற்கண்ட முகவரிக்கு வர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவ. 20, 21-இல் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்

சென்னை, நவ.15: வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கை, நீக்கம், திருத்தம் மேற்கொள்ள தமிழகம் முழுவதும் நவ. 20, 21-ஆம் தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறும் என்று தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகு கூறியுள்ளார்.

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை பெய்ததன் காரணமாக பல்வேறு இடங்களில் சிறப்பு முகாமை வாக்காளர்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் தமிழகம் முழுவதும் நவம்பர் 20, 21-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தமிழகத் தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகு தெரிவித்துள்ளார்.

மேலும், ஏற்கெனவே அறிவித்தவாறு நவம்பர் 27, 28-ஆம் தேதிகளிலும் சிறப்பு முகாம் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்.

ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட், இயங்கிவரும் நிறுவனம் எனும் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக (நொடித்த நிலையில்) அதன் E-ஏலத்திற்கு EOI சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் நீட்டிப்பு

இந்த நாளிதழில் 21.10.2021 மற்றும் 04.11.2021 அன்று வெளியிடப்பட்ட ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட், இயங்கிவரும் நிறுவனம் எனும் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக (நொடித்த நிலையில்) அதன் E-ஏலத்திற்கான பொது அறிவிப்பினைத் தொடர்ந்து, இதன்மூலம் அறிவிப்பதாவது; விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பத்தினை (EOI) சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 30.11.2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆவணத்தைப் பரிசீலிப்பது தொடர்பான பிற தேதி விவரங்களும் அதன்படி நீட்டிக்கப்பட்டுள்ளன / மாற்றியமைக்கப் பட்டுள்ளன. இது தொடர்பான முழு விவரங்களுக்கு கடன் பெற்ற நிறுவனத்தின் இணையதளத்தில் (http://www.sterlingbiotech.in/liquidation.html) ஏற்றப்பட்டுள்ள 15.11.2021 தேதியிட்ட நடைமுறை ஆவணம் பதிப்பு 2.2 பார்க்கவும்.

ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட்-க்காக (நொடித்த நிலையில்)
ஒம்/-
Dr. (h.c.) CS Adv மம்தா பினானி
(கலைப்பு அலுவலர்)
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00086/2017-18/10227
liquidatorsterlingbiotech@gmail.com (செயல்முறை குறிப்பிட்டது)
mamtabinani@gmail.com (IBBIயில் பதிவு செய்யப்பட்டது)
தொ.பே.: +91 9831099551
IBBIயில் பதிவு செய்யப்பட்டகலைப்பு அலுவலர் முகவரி:
2வது தளம், நிக்கோ ஹவுஸ், 2 ஹரே தெரு, கொல்கத்தா-700001, மேற்கு வங்கம்.
தேதி: 15.11.2021

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

சொத்து சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிர்வாக அலுவலகம் : எண். 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001 மற்றும் இதர இடங்களில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகங்களில் ஒன்றான எண்.706, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006-ல் செயல்பட்டு வரும் வங்கியின் கிளை அலுவலகத்திற்கும் 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டத்தின்படி அதிகாரபூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(2) & (12) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி-3ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர்களாகிய (1) M/s. லியோ மார்ஷல் ஏஜென்ஸி, பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி T. உஷா ராணி, எண்.174/2, 26, கிழக்குத் தெரு, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை – 600041. மேலும், M/s. லியோ மார்ஷல் ஏஜென்ஸி, பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி T. உஷா ராணி, எண்.4/164, பாஸ்மதி காம்பிளெக்ஸ், பாலாஜி நகர், சித்தாபுதூர், கோயம்புத்தூர் – 641044. (2) திருமதி T. உஷா ராணி, க/பெ. S. தங்கவேலு, எண்.34-A2-5, VOC நகர், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் – 614601. (3) திரு. S. தங்கவேலு, த/பெ. சுப்பிரமணியன், எண்.34-A2-5, VOC நகர், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் – 614601. (4) M/s. ஏடான் லியோ ஹெல்த் ஃபாம்ப் பி. லிட்., பிரதிநிதியாக அதன் நிர்வாக இயக்குநர் திருமதி T. உஷா ராணி, எண்.174/2, 26, கிழக்குத் தெரு, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை – 600041. (5) Ms. M. அனு பிரியா, த/பெ. S. முருகேசன், ஃப்ளாட் எண்.2C, தேவ் அபார்ட்மென்ட்ஸ், எண்.64AB, பவானி தெரு, பொன்னியம்மன் காலனி, S. குளத்தூர், சென்னை – 600117. மேலும், Ms. M. அனுபிரியா, த/பெ. S. முருகேசன், எண்.D2105, வைகுண்ட் சுந்தரம், காரப்பாக்கம், சென்னை – 600097. ஆகியோர்களுக்கு 25-08-2021 தேதியிட்ட கேட்பு அறிவிப்பினை அனுப்பி, அது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அந்த கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்பாக்கித் தொகையான ரூ.4,97,54,571/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஏழு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) மற்றும் 18-08-2021 முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியுடன் திருப்பிச் செலுத்தி கடனைத் தீர்க்குமாறும் கோரியிருந்தார்கள்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சட்டபூர்வ அறிவிப்பு கிடைக்கப் பெற்றும் மேற்படி கடன் பாக்கியை கடன்தாரர்கள் செலுத்தத் தவறிவிட்டபடியால், கடன்தாரர்களுக்கும், மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி சட்டம் 8வது விதியில் வழங்கப்பட்டுள்ள தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 10-11-2021 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி தமது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்.

எனவே, குறிப்பாக மேலே கூறப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள அடமானத்திலுள்ள அசையா சொத்து தொடர்பாக எந்த ஒரு நபரும் எவ்விதமான பேரமோ நடவடிக்கையோ வைத்துக்கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கித் தொகையான ரூ.5,08,90,929/- (ரூபாய் ஐந்து கோடியே எட்டு லட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஒன்பது மட்டும்) மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் வரை 01-11-2021 முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்துச் செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13, துணை பிரிவு (8)ல் உள்ள சொத்துக்களை மீட்பதற்கான கால அளவு குறித்த விதிகளை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
சொத்து – 1 : (S. தங்கவேலு மனைவி திருமதி T. உஷா ராணிக்கு சொந்தமான சொத்து)
சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை பதிவு மாவட்டம், சைதாப்பேட்டை J-1 துணை பதிவு மாவட்டம், மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி தாலுக்கா, பழைய சர்வே எண்.70/80 பகுதி & சர்வே எண்.70/21 பகுதி, புதிய சர்வே எண்.70/23 &70/24 T.S. எண்.6, பிளாக்-29, திருவான்மியூர் கிராமம், காமராஜ் நகர், 26வது தெரு, கதவு எண்.2 கொண்ட ஏறக்குறைய ஒரு கிரவுண்டு மற்றும் 525 ச. அடி பரப்பளவிலான பிளாட் எண்.174, அதிலுள்ள குடியிருப்பு கட்டிடம் மற்றும் அனைத்து துண்டுகளும் பாகங்களும். எல்லைகள் : வடக்கில் - 30 அடி ரோடு; கிழக்கில் - பிளாட் எண்.173; தெற்கில் - பிளாட் எண்.179; மேற்கில் - பிளாட் எண்கள் 175, 176 cum 177. அளவுகள் : வடக்கு மற்றும் தெற்கு பக்கம் 45 அடி; கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் 65 அடி, மொத்தம் ஒரு கிரவுண்டு 525 ச. அடி. இந்த சொத்து சென்னை - 600041, சென்னை மாநகராட்சிக்குள் அமைந்துள்ளது.

இடம் : சென்னை, தேதி : 10-11-2021 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

அழைப்பாணை

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி
அ. வ. எண். 44 / 2020
(ஆர்டர் XXXVII ரூல் 1 & 2 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் படியான சுருக்க வழக்கு)
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், திருவொற்றியூர் கிளை. ... வாதி
–எதிர்–
1. திரு. ஸ்ரீ நித்ய வள்ளுவன், த/பெ. திரு. கிருஷ்ணன்,
2. திரு. போஜராஜன், த/பெ. திரு. கண்ணன். ... பிரதிவாதிகள்

பொருள் : பொன்னேரி, கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.44/2020 – மேற்படி பிரதிவாதிகளில் முதல் பிரதிவாதிக்கு அழைப்பாணை சம்பந்தமாக.

மேற்குறிப்பிட்ட வழக்கு 05/10/2021 தேதியன்று பொன்னேரி, கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதிகள் ஆஜர் ஆக ஏற்கனவே அறிவிப்பு அனுப்பப்பட்டு இருந்தது அதில் 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததனால் அழைப்பாணையை தினசரி நாளிதழ் மூலம் தெரியப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது எனவே இவ்வறிக்கையின் மூலம் தங்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் வரும் 01/12/2021 அன்று 1ம் பிரதிவாதியான தாங்கள் நேரடியாகவோ அல்லது முறையான அறிவுறுத்தலோடு வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் தவறும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அசல் வழக்கு தாங்கள் இல்லாமலேயே விசாரித்து சட்டத்திற்கு உட்பட்டு தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு.பெ.சீனுவாசன், பி.எ.பி.எல்., வாதியின் வழக்கறிஞர்,
எண்.323/156, அறை எண்.14, இரண்டாவது தளம், ஆந்திரா இன்சுரன்ஸ் கட்டிடம், தம்பு செட்டி தெரு, பாரிமுனை, சென்னை – 600001.

தெற்கு ரயில்வே

திருவனந்தபுரம் (பணிக் கிளை)
E-டெண்டர் அறிவிப்பு
எண்.V/W/TVC/13/2021 தேதி 12/11/2021 மற்றும் V/W/TVC/14/2021 தேதி 13/11/2021

இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பாக, கோட்ட ரயில்வே மேலாளர் / பணிகள் கிளை / திருவனந்தபுரம் கோட்டம், திருவனந்தபுரம்- 14 அவர்கள், எமது E-டெண்டர் தளம் www.ireps.gov.in இல் கொடுக்கப்பட்டுள்ள டெண்டர் அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்கான ஆன்லைன் டெண்டர்களை வரவேற்கிறார் திருவனந்தபுரம் கோட்டத்தில் உள்ள பணிகளுக்கான E-டெண்டருக்கு விண்ணப்பிக்க விரும்பும் டெண்டரர்(கள்) / ஒப்பந்ததாரர்(கள்) www.ireps.gov.in என்ற E-டெண்டர் தளத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் மற்றும் ஆன்லைன் டெண்டர்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. எண்	விவரம்	தோராய மதிப்பு ரூ (லட்சத்தில்)	பணி முடிக்கும் காலம் (மாதங்களில்)
	E-டெண்டர் அறிவிப்பு எண். V/W/TVC/13/2021 தேதி 12/11/2021		
1	சாலக்குடி, ஆல்வாய் & எர்ணாகுளம் நிரந்தரப்பாதை பிரிவுகளில் ஆட்கள் மூலம் டீப் ஸ்க்ரீனிங் செய்தல்	67.18	ஆறு
	டெண்டர் முடிவு தேதி மற்றும் நேரம்: 6/12/2021, 11.00 மணி		
	E-டெண்டர் அறிவிப்பு எண். V/W/TVC/14/2021 தேதி 13/11/2021		
1	திருவனந்தபுரம் நி.பாதை பிரிவில் டிராக்கின் மேனுவல் டீப் ஸ்கிரீனிங்	51.14	ஆறு
2	ஆலப்புழை மற்றும் வர்கலா நி.பாதை டிராக் & பாயிண்ட்களை மேனுவல் டீப் ஸ்கிரீனிங்	60.14	ஆறு
3	எர்ணாகுளம்- அதிகாரிகள் ஓய்வு இல்லம் & SRH க்கான தூய்மை பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் சேவைகள் இரண்டு ஆண்டுகளுக்கு	35.14	இருபத்தி நான்கு
4	திருச்சூர்- அதிகாரிகள் ஓய்வு இல்லம் & SRH க்கான தூய்மை பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் சேவைகள் இரண்டு ஆண்டுகளுக்கு	17.21	இருபத்தி நான்கு
5	கோட்டயம்- அதிகாரிகள் ஓய்வு இல்லம் & SRH க்கான தூய்மை பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் சேவைகள் இரண்டு ஆண்டுகளுக்கு	17.25	இருபத்தி நான்கு
6	திருவனந்தபுரம்- அதிகாரிகள் ஓய்வு இல்லம் & SRH க்கான தூய்மை பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் சேவைகள் இரண்டு ஆண்டுகளுக்கு	34.47	இருபத்தி நான்கு
7	கன்னியாகுமரி-அலுவலர்கள் ஓய்வு இல்லம், அலுவலர்கள் விடுமுறை இல்லம் மற்றும் துணை அலுவலர் விடுமுறை இல்லம் மற்றும் NCJ இல் மேற்பார்வையாளர்கள் ஓய்வு அறை தூய்மை பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் சேவைகள் இரண்டு ஆண்டுகளுக்கு	20.83	இருபத்தி நான்கு
8	கோட்டயம்- PF எண். 1 & 2/3-ல் உத்தேச லிஃப்ட் (மீதப்பணி)	21.07	ஆறு
9	முதுநிலை கோட்டப் பொறியாளர்/வடக்கு அதிகார வரம்பு-இரண்டாம் நிலைப் பாதை புதுப்பித்தல் பணிகள்-TRR(S) 4.930 கிமீ (PB 790/21-22)	64.25	பன்னிரண்டு
10	உதவி கோட்டப் பொறியாளர்/திருச்சூர் துணைக் கோட்டம் - இன்டர்லாக்டு பாயிண்ட் நாற்காலிகளை சுத்தம் செய்தல் மற்றும் லூப்ரிகேட் செய்தல் ஒரு ஆண்டுக்கு	25.33	பன்னிரண்டு
11	உதவி கோட்டப் பொறியாளர்/எர்ணாகுளம் துணைக் கோட்டம் - இன்டர்லாக்டு பாயிண்ட் நாற்காலிகளை சுத்தம் செய்தல் மற்றும் லூப்ரிகேட் செய்தல் ஒரு ஆண்டுக்கு	38.04	பன்னிரண்டு
12	உதவி கோட்டப் பொறியாளர்/கொல்லம் & திருவனந்தபுரம் துணைக் கோட்டம்- இன்டர்லாக்டு பாயிண்ட் நாற்காலிகளை சுத்தம் செய்தல் மற்றும் லூப்ரிகேட் செய்தல் ஒரு ஆண்டுக்கு.	42.00	பன்னிரண்டு
13	உதவி கோட்டப் பொறியாளர் / நாகர்கோவில் துணைக் கோட்டம்- இன்டர்லாக்டு பாயிண்ட் நாற்காலிகளை சுத்தம் செய்தல் மற்றும் லூப்ரிகேட் செய்தல் ஒரு ஆண்டுக்கு .	14.27	பன்னிரண்டு
	டெண்டர் முடிவு தேதி மற்றும் நேரம்: Sl No: 1 to 7 : 6/12/2021 at 11.00 hrs. Sl No: 8 to 13 : 13/12/2021 at 11.00 hrs.		

டெண்டரின் தோராயமான மதிப்பு, EMD & அமைவிடம் பற்றிய விவரங்கள் இ-தளம் www.ireps.gov.in இல் கொடுக்கப்பட்டுள்ளன. ஏலம் சமர்ப்பிப்பு விவரங்களுக்கு, www.ireps.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

முதுநிலை கோட்டப் பொறியாளர் / ஒருங்கிணைப்பு, திருவனந்தபுரம்-14

Follow us on : twitter.com/@GMSRailway

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

சொத்து சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிர்வாக அலுவலகம் : எண். 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001 மற்றும் இதர இடங்களில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகங்களில் ஒன்றான எண்.706, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006-ல் செயல்பட்டு வரும் வங்கியின் கிளை அலுவலகத்திற்கும் 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டத்தின்படி அதிகாரபூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(2) & (12) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி-3ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர்களாகிய (1) திருமதி K. புவனேஸ்வரி, க/பெ. C. ரகு, எண்.197, பெரியார் தெரு, வார்டு எண்.1, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் – 631209. (2) திரு. C. ரகு, த/பெ. சிட்டிபாபு, எண்.197, பெரியார் தெரு, வார்டு எண்.1, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் – 631209 ஆகியோர்களுக்கு 09-06-2021 தேதியிட்ட கேட்பு அறிவிப்பினை அனுப்பியும், அதனைத் தொடர்ந்து 29-07-2021 தேதியிட்ட செய்தித்தாள் பிரசுரத்தினையும் அனுப்பி, அது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அந்த கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்பாக்கித் தொகையான ரூ.22,11,242/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து பதினோராயிரத்து இருநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) மற்றும் 03-06-2021 முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியுடன் திருப்பிச் செலுத்தி கடனைத் தீர்க்குமாறும் கோரியிருந்தார்கள்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சட்டபூர்வ அறிவிப்பு கிடைக்கப் பெற்றும் மேற்படி கடன் பாக்கியை கடன்தாரர்கள் செலுத்தத் தவறிவிட்டபடியால், கடன்தாரர்களுக்கும், மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி சட்டம் 8வது விதியில் வழங்கப்பட்டுள்ள தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 10-11-2021 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி தமது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்.

எனவே, குறிப்பாக மேலே கூறப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள அடமானத்திலுள்ள அசையா சொத்து தொடர்பாக எந்த ஒரு நபரும் எவ்விதமான பேரமோ நடவடிக்கையோ வைத்துக்கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கித் தொகையான ரூ.20,90,454/- (ரூபாய் இருபது லட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் வரை 28-09-2021 முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்துச் செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13, துணை பிரிவு (8)ல் உள்ள சொத்துக்களை மீட்பதற்கான கால அளவு குறித்த விதிகளை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
சொத்து - 1 : (C. ரகு மனைவி திருமதி K. புவனேஸ்வரிக்கு சொந்தமான சொத்து)
வட சென்னை பதிவு மாவட்டம், கொன்னூர் துணை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் கிராமம் (சென்னை - 600049), 2வது மெயின் ரோடு, ஜானகிராம் காலனி, எண்.55, G-4, சர்வே எண்.187/1 - 4ல் உள்ள DTC ஒப்புதல் எண்.202/75 கொண்ட 3,430 ச. அடி காலி மனை மற்றும் அனைத்து துண்டுகளும் பாகங்களும். எல்லைகள் : வடக்கில் - பிளாட் எண்.56 (லட்சுமணன்); தெற்கில் - பிளாட் எண்.54 (கஸ்தூரி பாய்); கிழக்கில் - 24 அடி ரோடு; மேற்கில் - பிளாட் எண்.3 (அனிதா ஃபிரான்சிஸ்). அளவுகள் : கிழக்கு - மேற்காக வடக்கு பக்கம் 73 அடி, தெற்கு பக்கம் 67 அடி; வடக்கு - தெற்காக கிழக்கு பக்கம் 40 அடி, மேற்கு பக்கம் 58 அடி, மொத்தம் 3,430 ச. அடி.

இடம் : வில்லிவாக்கம், தேதி : 10-11-2021 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
Repco Home Finance
கேளம்பாக்கம் கிளை: எண்.1/162, முதல் தளம், கோவளம் மெயின் ரோடு, கேளம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில், கேளம்பாக்கம், சென்னை-603 103.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 9ன்படி 04.05.2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் கணக்கு எண்.2151820000386-கீழ் கடன்தொகை ரூ.17,63,131/- மற்றும் 03.05.2021 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன்தாரர்: Mr.S.கதிர்வேலு, S/o.சந்தியாகு, எண்.29/10, ஜெகஜீவன் ராம் தெரு, ஆனந்தபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-600059. மேலும் முகவரி, M/s.கதிர்வேலு காண்ட்ரக்டர்ஸ், எண்.5, விர்கோ பிளாசா, கோவிலம்பாக்கம் மெயின் ரோடு, ஈச்சங்காடு, சென்னை-600117, சக-கடன்தாரர்: Mrs.K.அந்தோனி ஷர்மிலா, W/o.கதிர்வேல், எண்.29/10, ஜெகஜீவன் ராம் தெரு, ஆனந்தபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-600059. ஜாமீன்தாரர்: Mr.A.பால் பிரகாசம், S/o.M.ஆரோக்கியசாமி, எண்.11/5, பலராமன் தெரு, கணபதிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-600045 ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன் பெற்றவர், சக-கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் நிலுவைத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும், சக-கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதி முறைகளின் 9 வது விதியின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 10.11.2021 அன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்!

இது முதற்கொண்டு கடன் பெற்றவரோ, சக-கடன்தாரர்களோ, ஜாமீன்தாரர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், எண்.1/162, முதல் தளம், கோவளம் மெயின் ரோடு, கேளம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில், கேளம்பாக்கம், சென்னை-603 103-க்கு வந்து சேரவேண்டிய கடன் கணக்கு எண்.2151820000386-கீழ் கடன் தொகை ரூ.19,16,824/- மற்றும் 10.11.2021 முதல் அதற்கான வட்டிக்கும், இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டம் பிரிவு 13(8)ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன்பாக்கி வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து, கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது அல்லது உரிமை மாற்றித் தரப்படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், சேலையூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.145B/2 பகுதி, பட்டா படி T.S.எண்.22, ப்ளாக் எண்.18, வார்டு எண்.H, பழைய எண்.173, புதிய எண்.112, ஜெகஜீவன் ராம் தெரு, ஆனந்தபுரம், சேலையூர் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் வடக்கு: 27 அடி, தெற்கு: 27 அடி, கிழக்கு: 32 அடி, மேற்கு: 32 அடி ஆக மொத்தம் 864 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Mr.மணி-க்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், தெற்கு: Mr.ஜோசப்-க்கு சொந்தமான மனை, கிழக்கு: Mr.ஜோசப்-க்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், மேற்கு: ஜெகஜீவன் ராம் தெரு.

தேதி: 10.11.2021 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்